ஊடக அறிவித்தல் இல. 14

# தேர்தல் ஆணைக்குழு

2021.05.04 ஆந் திகதி ஒன்றுகூடிய தேர்தல் ஆணைக்குழு, பின்வரும் அறிவித்தல்களை வெளியிடத் தீர்மானித்துள்ளது:-

- தேர்தல் சட்டங்களைத் திருத்துவதற்காக விசேட பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிப்பது குறித்து சட்டவாக்கத்துறைக்கு கௌரவ பாராட்டைத் தெரிவிக்கும் தேர்தல் ஆணைக்குழு, தமது பணிகளை ஆரம்பித்த மறுதினமே பிரதம அமைச்சரைச் சந்தித்து முன்வைத்த கோரிக்கைக்கு துரிதமாக பதிலளித்து, மிகவும் ஆர்வத்துடன் ஆலோசனைகளை வழங்கி, அது தொடர்பில் செயலாற்றியதையிட்டு பிரதம அமைச்சருக்கும், அது சம்பந்தமாக தலையிட்டு செயலாற்றிய சபாநாயகருக்கும், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட இந்த யோசனையை ஏகமனதாக நிறைவேற்றியது குறித்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தேர்தல் ஆணைக்குழு நன்றிகளைத் தெரிவிக்கின்றது.

- ஜனநாயக முறையொன்றின் இருப்பின் மீது சட்டவக்கத்துறையின் செயற்பாடும் வழிகாட்டலும் மிகவும் முக்கியமான ஒரு காரணியாக அமைகின்றதென்பதில் ஐயமில்லை. அரசியல்சார், உயர்தொழில்சார் மற்றும் பண்புத்தரமுள்ள சட்டவாக்கத்துறையொன்றை நியமித்துக் கொள்ளும்போது அதற்கு பொது மக்களுக்குள்ள உரிமையையும் அதிகாரத்தையும் மிகவும் நிறைவாகவும் சரியான முறையிலும் வெளியிடும் பின்னணியையும் சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக்கொள்ள முடிவது தேர்தல் செயன்முறையை நியாயமான, வெளிப்படைத் தன்மையுடன்கூடிய, ஊழலும் பாதிப்புமின்றிய, நியாயமான வேட்பாளர்களுக்கு சம களமொன்றை உருவாக்குகின்றதும், அரச வளங்களை துஸ்பிரயோகம் செய்வதிலிருந்து விலகியதும் அதிக செலவு அற்றதுமான ஒரு முறைமையின் மூலமே என்று தேர்தல் ஆணைக்குழு நம்புகிறது. தற்போது காணப்படும் தேர்தல் சட்டங்கள் அந்நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு போதுமானவையல்ல என்றும், புதிய சட்டங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் உள்வாங்கிக்கொள்ளும் தேவை 1931 அரசுப் பேரவை காலம் முதல் இன்று வரை காணப்பட்ட தேர்தல் செயன்முறையினாலும் நீதிமன்றத் தீர்ப்புகளினாலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சட்டத் திருத்தத்தின் மூலம் இத்தேவைப்பாடு தொடர்பில் அரசியல் கட்சிகள், தேர்தல் அறிவார்ந்த ஒழுங்கமைப்புகள், சிவில் ஒழுங்கமைப்புகள், கண்காணிப்பு ஒழுங்கமைப்புகள், தொழிற்சங்கங்கள், மத அமைப்புகள், வெகுஜன ஊடகங்கள் மூலமும் தொடர்ச்சியாக விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. தேர்தல் செயன்முறையில் ஜனநாயக நீரோட்டத்தை விட தூயதும் ஜனநாயகமயமாக்கிக்கொள்ளக்கூடியதுமான உத்தேச சட்ட மறுசீரமைப்பின் மூலம் எதிர்பார்க்கப்படுவதுடன், பயனுறுதிவாய்ந்தும் மிகவும் நம்பகரமானதுமான ஜனநாயகமுள்ள சட்டவாக்கத்துறையொன்றை நியமித்துக்கொள்வதற்குரிய யோசனைகளையும் கருத்துக்களையும் இப்பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு அனைத்து அரசியல் கட்சிகள், சிவில் ஒழுங்கமைப்புகள், தொழிற்சங்கங்கள், தொழில்வாண்மையினர், மத ஒழுங்கமைப்புகள், வெகுஜன ஊடக ஒழுங்கமைப்புகள் உள்ளிட்ட இது தொடர்பில் ஆர்வமுள்ள அனைத்துத் தரப்பினரிடமும் தேர்தல் ஆணைக்குழு மிகவும் விநயமாக வேண்டிக் கொள்கின்றது.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2021.05.04